தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 30, திருவள்ளுவர் ஆண்டு-2046

2015 செப்டம்பர் 16, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும் செய்யும் முறை அறிந்து திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

271—

உள்நாட்டு மீனவர்களுக்கு விடுகள்

***51614—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களில் வசிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற உயர்ந்த எண்ணத்தை உள்ளத்திலே உறுதியாக ஏற்று, தமிழக மக்களின் வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, நாளும் உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் மற்றும் சீர்காழி ஒன்றியங்களில் வசிக்கும் உள்நாட்டு மீனவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பின், அந்த மீனவர்கள் வீடு வேண்டி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தால், அவற்றை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவும், கம்பீரமும் கலந்துவைத்த காவியத் தாயே, நிறைந்த புகழால் உயர்ந்து நிற்கும் மனித நேயத் தலைவியே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எளியோர் நலம் உயர எந்நாளும், எந்நேரமும் உழைக்கும் கருணைத் தெய்வமே, அம்மா! கண்ணுக்கு மை அழகு, கவிதைக்குச் சொல் அழகு, மண்ணுக்கு மரம் அழகு, பெண்ணுக்குப் பூ அழகு, தமிழ் மண்ணுக்கு அம்மா நீங்கள்தான் அழகு. (மேசையைத் தட்டும் ஒலி)*

சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி இரண்டரை மடங்கு முதலீடுகளை ஈர்த்து நிகரில்லா வெற்றியைத் தமிழகத்திற்குத் தந்த தாயே, அம்மா, இனி வாழும் காலமெல்லாம் இவ்வையகம் உங்கள் வரலாறு பேசுமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மீன் வளத் துறைக்கும் 500 கோடி ரூபாய் முதலீடு பெற்றுத் தந்து, மீனவ மக்களை கண்ணின் இமை போலக் காக்கும் காவல் தெய்வம், நான் அனுதினமும் வணங்கும் கடவுள்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு ஏதுவாக ஆற்றங்கரை மற்றும் ஆற்றுப் படுகைகளில் தங்கள் வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். மழை மற்றும் வெள்ளக் காலங்களில் இவர்களது வீடுகள் பாதிப்புக்குள்ளாவதால், இவர்களுக்கு மீன் வளத் துறையின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், உள்நாட்டு மீனவ மக்கள் சார்பிலும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

272—

ஆவின் பாலகம்

***52484 திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிபாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று எந்நாளும் சிந்தித்து, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற நோக்கோடு, துறைதோறும் முதன்மை படைத்து, பால் வளத் துறையில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, தமிழகத்தின் வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினருக்காகவும்,

TRUTH ALONE TRIUMPHS